பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டம் - 2024

பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 செப்தெம்பர் 08 ஆம் திகதிய செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 55 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையின் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் உள்ள செயற்திட்ட சமூகங்களை வலுவூட்டுவதற்காக பாதுகாப்பான, வினைத்திறனான மற்றும் காலநிலையைத் தாங்கக்கூடிய இணைப்பை வழங்குவதும், விவசாய விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 101,499.6 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 500 மில்லியன் தொகையானதுடன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. 2023 ஏப்ரல் 19 ஆம் திகதிய ஆர்ஈஎஸ்51645 ஆம் இலக்க மறுசீரமைப்பு பத்திரத்தின் பிரகாரம் கடன் தொகையானது தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறுக்கான (CERC) ஐ.அ.டொலர் 325 மில்லியன் மீள்ஒதுக்கீடு காரணமாக ரூபா 54,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 175 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. ரூபா 300 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.97 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2021 நவம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2026 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்கீட்டு குறைபாடுகள்	தொகை ரூபா மில்லியன்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு 05 மாவட்டங்களிலுள்ள 12 பொதிகளுடன் தொடர்புபட்டு	10,378.63	எஸ்ஏசீ கொடுப்பனவுகள் நிறைவடைந்ததும் பூர்த்திசெய்யப்பட்ட வீதிப்	பூர்த்திசெய்யப்பட்ட வீதிகளை மூலதனமாக்குவதற்க

	பூர்த்திசெய்யப்பட்ட 268.15 கி.மீ நீளமான வீதியின் கிரயம் ரூபா 10,378.63 மில்லியனாகும். இருப்பினும், அது செயற்திட்டத்தினால் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக 2024 திசெம்பர் 31 இலுள்ளவாறான நடைமுறை வேலை அத்தொகையினால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.		பொதிகளை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	ான அளவுகோள் மற்றும் முறையான கையளிப்பு நடைமுறை என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 04 இன் பிரகாரம், வெளிநாட்டு கடன் மீது ஈஆர்டி யினால் செலுத்தப்பட்ட ரூபா 13,783.26 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 43.20 மில்லியன் தொகையான வட்டிக் கட்டணங்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, வெளிநாட்டு கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை என்பன அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	13,378.63	கடனோடு தொடர்புபட்ட வட்டி கட்டணங்கள் கடன் உடன்படிக்கையின் ஒரு கூறாக ஏற்பட்டிருக்கவில்லை. மேலும் இது திறைசேரியினால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.	உரிய தகவல்கள் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் வட்டிக் கட்டணங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 04 இன் பிரகாரம் கணக்கிடப்படலும் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 4 இன் பிரகாரம், ரூபா 498.25 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.53 மில்லியன் தொகையான திரண்ட ஒப்படைப்பு கட்டணங்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை	498.25	கடனோடு தொடர்புபட்ட ஒப்படைப்பு கட்டணங்கள் கடன் உடன்படிக்கையின் ஒரு கூறாக ஏற்பட்டிருக்கவில்லை. மேலும் இது திறைசேரியினால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.	உரிய தகவல்கள் திறைசேரியிடமிருந் து பெற்றுக்கொள்ளப் பட வேண்டியதுடன் ஒப்படைப்பு கட்டணங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 04 இன்

	என்பன அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.			பிரகாரம் கணக்கிடப்படலும் வேண்டும்.
(ஈ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட வட்டி மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள் முறையே ரூபா 13,783.26 மில்லியன் மற்றும் ரூபா 498.25 மில்லியனாக காணப்பட்ட போதிலும் அது நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களில் ரூபா 5,990.75 மில்லியன் மற்றும் ரூபா 503.01 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. எனவே, இரண்டு மிகுதிகளுக்குமிடையேயான வித்தியாசம் முறையே ரூபா 7,792.51 மில்லியன் மற்றும் ரூபா 4.46 மில்லியனாக காணப்பட்டது.	வட்டி 13,783.26 ஒப்படைப்பு கட்டணங்கள் 498.25	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட்டி கட்டணங்கள் மற்றும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்படைப்பு கட்டணங்கள் என்பனவற்றின் மீதான தகவல்களை திரைசேரி வழங்கியிருந்தது. எனவே, 2023 திசெம்பர் 31 வரையான வட்டிக்கட்டணங்களையே நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம்.	எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இல 1 இன் பிரகாரம் நியாயப்பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டும்.

2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள்	இணக்கமின்மை / கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய பொதுநிர்வாக சுற்றறிக்கை இல 9/2009 இன் பந்தி 02(iv)	அனைத்து அரச நிறுவனங்களிலுமுள்ள அனைத்து அரச உத்தியோகத்தர்களினதும் உள்வருகை மற்றும் வெளியேருதல் நேரங்கள் விரல் அடையாள பதிவு இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக நேரத்தின் அடிப்படையில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளங்கள் போன்ற நிரந்தரகடமை	இரண்டு பிஜயு அலுவலகங்களில் வெளிக்கள உத்தியோகத்தர்களிற்கு மேலதிகமாக இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள் பணிபுரிவதன் காரணமாக விரல் அடையாள பதிவு இயந்திரத்தை நிறுவ பெறுகை நடைமுறை ஏற்கனவே	மேலதிக மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகளை சான்றுருதிப்படுத்த முன்னர் உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் விசேட கவனம் செலுத்தப்படவேண்டிய துடன் 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய

		நேரத்திற்குப் பின்னராக செலுத்தப்படும் படிகளின் விடயத்தில் நேரத்தை அடிப்படையாகக் கொள்வதாயின் விரல் அடையாளப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும் மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்படாமல் அங்கீகரிக்கப்பட்டு சான்றுருதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் அதன் பெறுபேறாக, விரல்அடையாள பதிவு இயந்திரங்கள் மூலம் உள்வருகை மற்றும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்தாமல் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கைக்கு முறணாக மீளாய்வாண்டில் பிஜயு உத்தியோகத்தர்களிற்கு கூட்டுமொத்தம் ரூபா 5.24 மில்லியன் மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது.	ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் எழுத்துமூலமான அறிவுறுத்தல்களும் வழங்கப்படல் வேண்டும்.
(ஆ)	2019 சனவரி 12 ஆம் திகதிய டீஎம்ஏ/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை.	உள்ளககணக்காய்வு மீளாய்வுக்குழு நிறுவப்பட வேண்டியதுடன் குறைந்தது 04 கூட்டங்கள் வருடாந்தம் நடாத்தப்படல் வேண்டும். இருப்பினும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து எவ்வித குழுகூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் கணக்காய்வு குழுகூட்டங்களை நடாத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	ஏஎம்சீ ஆனது சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நடாத்தப்படல் வேண்டும்.
(இ)	2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு	குறித்த காலப்பகுதியினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் பதிலலிக்கப்பட்டுள்ளதா என	பிஎம்யு ஆனது அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் பதிலலித்துள்ளதுடன்	2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு

	38(1)(உ)	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகிய இருவரும் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட இரண்டு கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பாக 21 நாட்கள் தொடக்கம் 34 நாட்கள் என்ற வீச்சிலான தாமதத்துடன் பதில்கள் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	அவை கணக்காய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும், குறித்த காலப்பகுதியினுள் அனைத்து ஐயவினாக்களிற்கும் பதிலலிக்க பிஎம்யு அறிவுறுத்தியுள்ளது.	38(1)(உ) இன் பிரகாரம் தாமதமின்றி அனைத்து ஐயவினாக்களிற்கும் பதிலலிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் பந்தி 9.3.	செயற்திட்டத்தின் வழிநடாத்தல் குழு கூட்டங்கள் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படவேண்டிய போதிலும் இரண்டு கூட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	விடயங்களின் முன்னுரிமை மற்றும் அதன் தேவைகளை கருத்தில் கொண்டு செயற்திட்ட வழிநடாத்தல் குழு (பிஎஸ்சீ) கூட்டம் நடாத்தப்படுகிறது. அடிப்படையில், செயற்திட்டமானது மீளாய்வாண்டில் சுமூகமாக செயல்பட்டு வருகின்றது. இருப்பினும் 2024 ஆம் ஆண்டில் இரண்டு பிஎஸ்சீ கூட்டங்கள் நடாத்தப்பட்டன.	சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் இனங்க வேண்டும்

3. பௌதீக முன்னேற்றம்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட வேண்டிய கிராமிய வீதிகளின் மதிப்பிடப்பட்ட நீளமானது நிதிகளின் மீள் ஒதுக்கீடு காரணமாக 3000 கி.மீ இலிருந்து ஏறத்தாழ 1000 கி.மீ ஆக குறைக்கப்பட்டிருந்தது, மேலும் மொத்த ஒதுக்கீடான ஐ.அ.டொலர் 500 மில்லியனில் ஐ.அ.டொலர் 325 மில்லியன் சீஈஆர்சீ இற்கு ஒதுக்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வீதி புனரமைப்பு பரிசீலனை

கூறு	செயற்பாடு	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு		தாமதம்/கணக்காய்வு விடயம்	தாமதங்களிற்கான காரணம்
		எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் கி.மீ	அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் கி.மீ		
பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக் கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல்	கிராமிய வீதியின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்பு	1,000	819.30	செயற்திட்ட முழு காலப்பகுதிக்குமாக ஏறத்தழ 1000 கிமீ வீதிகளை புனரமைக்க செயற்திட்டமானது திட்டமிட்டிருந்தும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்கிடப்பட்ட நீளம் 819.30 கி.மீ அல்லது 82 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இவ் வீதி புனரமைப்பு ஒப்பந்தங்களானது வீதிச் சொத்துக்களை பாதுகாப்பதனை உறுதிப்படுத்துவதற்கான 03 வருட செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பினையும் உள்ளடக்கியுள்ளது. செயற்திட்ட காலப்பகுதியான 05 வருடங்களில் 03 வருடங்கள் கடந்திருந்தும் கூட மீதமுள்ள வீதி நீளத்தினை அதன் இலக்கினுள் உள்ளடக்க செயற்திட்டத்தினால் முடியாமலிருந்தமை அவதானிக்கப்பட்டது.	வீதிகளை பரிசீலனை செய்வதில் தாமதம்.

முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	செயலாற்றல் திட்டத்தின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு அனைத்து 1000 கி.மீ களினதும் ஆரம்பகட்ட பரிசோதனைகளும் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் 819.30 கி.மீ இற்கான ஒப்பந்தங்களும் கையளிக்கப்பட்டிருந்தன. மிகுதி நீளத்திற்கான ஒப்பந்தங்கள் 2025 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டிற்குள் கையளிக்க திட்டமிடப்படும்.
கணக்காய்வாளர் பரிந்துரைகள்	செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்னயிக்கப்படலும் வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) வீதி புனரமைப்பு மற்றும் ஒப்பந்த கையளிப்பு

i. வீதி நீளம்

கூறு	**செயற்பாடு**	**2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**		**தாமதம்/கணக்காய்வு விடயம்**	**தாமதங்களிற்கான காரணம்**
		எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் கி.மீ	**அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் கி.மீ**		
பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக் கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல்	கிராமப்புற வீதிகளின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்புக்கான ஒப்பந்தத்தை வழங்குதல்	819.3	458.43	2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு இலக்கிடப்பட்டவற்றில் 56 சதவீதமான வீதி நீளங்கள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 210 கி.மீ நீளமான வீதி மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கூட கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே செயற்திட்ட காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய வீதி புனரமைப்பு	ஒப்பந்தங்களின் கையளிப்பில் தாமதம் மற்றும் அசாதாரண ஒப்பந்த தாமதங்கள்.

			வேலைகளின் ஒட்டு மொத்த பூர்த்தியாக்கலானது கணக்காய்வில் சவாலாக இருந்தது.

முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	டொலர் விகிதத்தில் ஏற்ற இறக்கத்துடன் கூடிய நிதிகளின் பற்றாக்குறை காரணமாக, பதுளை மாவட்டத்திலுள்ள வீதிகள் மேம்படுத்தலிற்காக கவனத்தில் கொள்ள முடியாமலிருந்தது.
கணக்காய்வாளர் பரிந்துரைகள்	செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்னயிக்கப்படலும் வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

ii. ஒப்பந்த பொதிகள்

கூறு	**செயற்பாடு**	**2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**		**தாமதம்/கணக்காய்வு விடயம்**	**தாமதங்களிற்கான காரணம்**
		எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் ஒப்பந்த பொதிகள்	**அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் ஒப்பந்த பொதிகள்**		
பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக் கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல்	கிராமப்புற வீதிகளின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்புக்கான ஒப்பந்தத்தை வழங்குதல்	16	12	செயற்திட்டமானது 2024 திசெம்பர் 31 வரை 47 சிவில் வேலை ஒப்பந்தங்களை அமுல்படுத்தியுள்ளதுடன் அதில் 2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு 16 ஒப்பந்தங்களை பூர்த்திசெய்ய திட்டமிட்டிருந்தது. அதில் 12 ஒப்பந்தங்கள் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மூன்று வருடங்கள் கடந்த பின்னர் 2024	ஒப்பந்ததாரர்களின் வினைத்திறனின்மை

திசெம்பர் 31 இலுள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அப் பூர்த்திசெய்யப்பட்ட ஒப்பந்தங்களில், 04 ஒப்பந்தங்கள் மாத்திரமே உண்மையான ஒப்பந்த காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி 08 ஒப்பந்தங்கள் உண்மையான பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து 57 நாட்கள் தொடக்கம் 314 நாட்கள் என்ற வீச்சிலான தாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. ஒப்பந்தங்களில் தாமதம் காரணமாக அதிகரிக்கப்படக்கூடிய ஆரம்ப கிரயங்களிலிருந்து செயற்திட்ட கிரயத்திலான அதிகரிப்பின் தாக்கத்தினை கணக்காய்வில் நிராகரிக்க முடியாமலிருந்தது.

முகாமைத்துவத்தின் கருத்துரைகள்

நிலவும் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் மற்றும் நிர்மான மூலப்பொருட்களின் பற்றாக்குறை, கோவிட் நோய்த்தொற்று மற்றும் நிலவும் பாதகமான காலநிலை போன்றன காரணமாக ஒப்பந்ததாரர்களிற்கு அவர்களது நிகழ்ச்சித்திட்டப்படி செயல்பட முடியாமலிருந்தது. இருப்பினும் மதிப்பிடப்பட்ட பின்னர் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர்களிற்கு ஈஓடி வழங்கப்பட்டிருந்தது.

கணக்காய்வாளர் பரிந்துரைகள்

செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்னயிக்கப்படலும் வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம்

மேற்கொள்ளப்படும் மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

iii. பாலங்கள்

கூறு	செயற்பாடு	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு		தாமதம்/கணக்காய்வு விடயம்	தாமதங்களிற்கான காரணம்
		எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் பாலங்கள்	**அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் பாலங்கள்**		
பாதுகாப்பான மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக் கூடிய போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துதல்	கிராமப்புற வீதிகளின் புனரமைப்பு, மேம்பாடு மற்றும் பராமரிப்புக்கான ஒப்பந்தத்தை வழங்குதல	43	0	2024 ஜூனிலான கடன்வழங்குனரின் இடைக்கால மீளாய்வின் பிரகாரம், பலவீனமான பாலங்களின் அவசர திருத்தத்திற்கான கூறு 1 இற்கு சீஈஆர்சீ சேமிப்பிலிருந்தான மிகுதி ஐ.அ.டொலர் 7.5 மில்லியனை மீள் ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. கடன் வழங்குனருடனான உடன்பட்ட நடவடிக்கைகளின் கீழ், பிஎம்யு ஆனது ரூபா 4,258 மில்லியன் திரன்ட மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 43 பாலங்களினை உள்ளடக்கிய பலவீனமான பாலங்களினை பூர்த்திசெய்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினை கடன் வழங்குனரிற்கு சமர்ப்பித்திருந்தது. 2024 திசெம்பர் 31	ஒப்பந்த நிர்வாகத்தில் தாமதம்.

	இலுள்ளவாறு பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 05 ½ மாதங்கள் கடந்திருந்தும்கூட எவ்வித பௌதிக செயலாற்றலும் கணக்கய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

முகாமைத்துவத்தின் கருத்துரைகள்

பாலத்தினை அடையாளப்படுத்தல், தொழிநுட்ப விபரம் சேகரிப்பு, வடிவமைப்புக்கள் மற்றும் பீஓகியுவ் களின் தயாரிப்பு, சுற்றாடல் மற்றும் சமூக பரிசீலனை அறிக்கை தயாரிப்பு என்பன அனைத்து பாலங்களிற்கும் தற்போது இடம்பெறுகின்றது. மேலும் ஆறு பாலங்களிற்கான கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன.

கணக்காய்வாளர் பரிந்துரைகள்

செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்படலும் வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

இல	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	ஒப்பந்ததாரர் உண்மையான ஒப்பந்த காலப்பகுதி முடிவடைவதற்கு அல்லது ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஈஓடி திகதிக்கு முன்னர் ஈஓடி இற்காக விண்ணப்பிக்க வேண்டிய போதிலும் ஒப்பந்ததாரர்கள் 2024 காலப்பகுதியில் தொடரப்பட்ட மூன்று ஒப்பந்தங்களில் 57 நாட்கள் தொடக்கம் 159 நாட்கள் என்ற வீச்சிலான தாமதத்துடன் ஈஓடி இற்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.	இவ்வேண்டுகோள்களின் மதிப்பீடு ஒப்பந்த பொறியியலாளர், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மற்றும் மாறல் மதிப்பாய்வு குழு என்பனவற்றினால் மூன்று கட்டங்களில் செய்யப்பட்டது. ஒவ்வொரு கட்டத்தினதும் ஒட்டுமொத்த மதிப்பீட்டிற்காக போதியளவு நேரத்தினை ஒதுக்கியிருந்தது.	கால நீடிப்பு காரணங்களை உறுதிப்படுத்துவதற்கான முறையான ஆவணங்களை பெற்றுக்கொள்ளாது அனுமதிக்கப்படக்கூடாததுடன் மேலதிக கிரயங்கள் தவிர்க்கப்படலும் வேண்டும்.

(ஆ) ஈஒடி ஆனது உண்மையான ஒப்பந்த காலப்பகுதியினை கடப்பதற்கு அல்லது ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஈஒடி காலப்பகுதிக்கு முன்னர் அனுமதிக்கப்பட வேண்டிய போதிலும் ஈஒடியின் அனுமதியானது மீளாய்வாண்டில் தொடரப்பட்ட 11 ஒப்பந்தங்களில் 25 நாட்கள் தொடக்கம் 285 நாட்கள் வரையான வீச்சில் தாமத்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.	இவ்வேண்டுகோள்களின் மதிப்பீடு ஒப்பந்த பொறியியலாளர், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மற்றும் மாறல் மதிப்பாய்வு குழு என்பனவற்றினால் மூன்று கட்டங்களில் செய்யப்பட்டது. ஒவ்வொரு கட்டமும் ஒட்டுமொத்த மதிப்பீட்டிற்காக போதியளவு நேரத்தினை ஒதுக்கியிருந்தது.	கால நீடிப்பு காரணங்களை உறுதிப்படுத்துவதற்கான முறையான ஆவணங்களை பெற்றுக்கொள்ளாது அனுமதிக்கப்படக்கூடாததுடன் மேலதிக கிரயங்கள் தவிர்க்கப்படலும் வேண்டும்.

3.3 செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்ப்படுத்தலில் தாமதம்

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ) **வீதித் துறையின் நிறுவன மற்றும் கொள்கைக் கட்டமைப்பை மேம்படுத்துதல் - (உப-கூறு 1.2)**		
உப-கூறு 1.2 இன் கீழ் வீதித் துறையின் நிறுவன மற்றும் கொள்கை கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு கூட்டு மொத்தம் ஐ.அ.டொலர் 5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த துணைக் கூறானது கிராமப்புற மக்களின் போக்குவரத்து இணைப்புத்திறனை மேம்படுத்தும் நோக்கில், கிராமப்புற வீதிகளை ஒருங்கிணைத்து, முறையாக மேலாண்மை செய்வதற்கான மூலோபாயத்தினை உருவாக்குவதற்கும், வீதித் துறையை மேலாண்மை செய்யும்	அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்துள்ளது, மேலும் தேவையான அனுமதிகள் பெறப்பட்டுள்ளன. அதன்படி உரிய செயற்பாடுகள் குறுகிய காலப்பகுதியினுல் கையளிக்கப்பட்டு குறித்த நேரவறையரையினுள் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.	செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்படலும் வேண்டும்.

பொது நிறுவனங்களின் கட்டமைப்பு மற்றும் பணிக்கொள்கைகளை எளிமைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை கண்டறிய நிறுவன அமைப்பை மதிப்பாய்வு செய்வதற்கும், மேலும் ஆட்சி அமைப்பின் வரம்புக்குள் கிராமப்புறச் வீதிகளின் வீதி நிர்மானம் மற்றும் பராமரிப்புக்கான நிதியளிப்பை மேம்படுத்தும் பல்வேறு பொறிமுறைகளை ஆராய்வதற்கும் ஆதரவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகள் கடந்த பின்னரும், மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதேபோல், வீதித் துறை கொள்கைகளை புதுப்பிக்கவும் வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தேவையான ஆலோசகர்களை நியமிக்கும் செயல் இன்னும் பெறுகை நிலையிலேயே உள்ளது.

(ஆ) **வீதித் துறை மற்றும் சமூகத் திறன் மேம்பாடு – உப-கூறு 1.3**

2023 மே 09 ஆம் திகதிய செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் மற்றும் செயற்திட்ட மறுசீரமைப்பு தாள் இல ஆர்ஈஎஸ் 51645 இன் 24 ஆம் பிரிவின் பிரகாரம், இந்த உபகூறிற்காக செயற்திட்ட காலப்பகுதிக்குமாக கூட்டுமொத்தம் ஐ.அ.டொலர் 8.75 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் தகவல்தொழிநுட்பம் மற்றும் ஒன்றினைந்த தொழிநுட்பங்கள் என்பனவற்றினை	உரிய நடவடிக்கைகள் குறுகிய காலப்பகுதியினுல் கையளிக்கப்பட்டு குறித்த நேரவரையரையினுள் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.	செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்னயிக்கப்படலும் வேண்டும்.

கூட்டினைப்பதனூடான ஆர்டிஏ வின் திறன்மேம்பாடு, நிறுவன வலுப்படுத்தல் மற்றும் நாட்டினது நெகிழ்திறன் சார்ந்த வடிவமைப்பு தரங்களின் அபிவிருத்தி, வீதிஉட்கட்டமைப்பிற்கான இயற்கை சார் தீர்விற்கான நிர்மான வழிகாட்டல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள், காலநிலை ஒழுங்கிணைப்பு மற்றும் வீதி சொத்து முகாமைத்துவ முறைமை என்பவற்றினை அமுல்படுத்துவதில் ஆர்டிஏவின் திறன்மேம்பாடு மற்றும் நிறுவனரீதியான வலுப்படுத்தல் போன்ற இந்தக்கூறின் கீழான செயல்நடவடிக்கை திட்டத்திலுள்ள செயற்பாடுகளிற்கான ரூபா 377.5 மில்லியனில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட முகாமைத்துவ கிரயம் மற்றும் அதிகரிக்கக்கூடிய செயற்பாட்டு கிரயம் என்பனவற்றை தவிர்த்து கூட்டுமொத்தம் ரூபா 32.35 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. தனிப்பட்ட ஆலோசகர்களின் ஆட்சேர்ப்பு, உபகரணக்கொள்வனவு போன்ற நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதிவரை தாமதித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே செயற்திட்ட காலப்பகுதியில் ஒவ்வொரு துணைக்கூறுகளின் இலக்குகளையும் அடைந்துகொள்வது கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாகும்.

(இ) **கூறு – 2 ஐ அமுல்ப்படுத்துதல் : விநியோகச் சங்கிலியை மேம்படுத்துதல் மற்றும்**

விவசாயிகளுக்கான சேவைகளுக்கான அணுகல்

2021 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய சீஎம்34/2021 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2021 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய இல 21/1524/319/028 அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் செயற்திட்டத்தை அமுல்படுத்த விவசாய அமைச்சுடன் இணைந்து ஒரு கூட்டு அமுல்படுத்தல் பொறிமுறையை தயாரித்து நிறுவுவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்தக்கூறிற்கு கூட்டுமொத்தம் ஐ.அ.டொலர் 50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2023 மே 09 இல் மறுசீரமைப்பு தாளில் இருந்து ஐ.அ.டொலர் 15 மில்லியன் வரை குறைக்கப்பட்டது. இருப்பினும், மேற்படி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பரிந்துரைகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்தக்கூறு தொடங்கப்பட்டிருக்கவில்லை.

எனவே கீழ்வரும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலுள்ள அமுல்படுத்த முடியாமலிருந்தது.

- சிறிய அளவிலான கிராமிய விவசாய சேகரிப்பு மையம்/ அறுவடைக்கு பிந்திய நிலையங்களை மறுசீரமைக்க/ புனரமைக்க உள்ளூர் அமைப்புக்கள் மற்றும் உள்ளூர் ஒப்பந்ததாரர்களை ஈடுபடுத்தல்.
- விவசாய சமூகத்திற்கான முன்மொழிவை இறுதிசெய்வதில் உள்ள தாமதமானது கூறு-2 இன் அமுல்படுத்தலில் தாமதத்தினை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும் எம்ஒஏ விடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் ஓர் புதிய முன்மொழிவு அமைச்சரவை அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

முன்மொழிவு இறுதியாக்கப்பட்டவுடன், எம்ஒஏ ஆனது செயற்திட்ட காலப்பகுதியினுல் இச்செயற்பாடுகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கும்.

செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்னயிக்கப்படலும் வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

வேளாண்மை தந்திரோபாயத்திற்கான இலத்திரனியல் இயக்க தீர்வினை முன்னோடியாகக்கொண்ட உள்ளூர் தொழிற்துறையினை உருவாக்குதல்.

3.4 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த கடன் தொகையான ரூபா 54,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 175 மில்லியனில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,191 மில்லியனை மாத்திரமே செயற்திட்டமானது பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களின் மந்தகதியான செயலாற்றல் மற்றும் செயற்திட்டத்தின் கூறு 2 இனை ஆரம்பிப்பதில் தாமதம் போன்றன கடன் நிதிகளின் குறைவான பயன்பாட்டிற்கு பிரதானமாக தாக்கம் செலுத்துகின்றது.	நிலவும் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் மற்றும் நிர்மான மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் நிலவும் பாதகமான காலநிலை போன்றன காரணமாக ஒப்பந்ததாரர்களிற்கு அவர்களது இலக்கினை அடைந்துகொள்ளுமளவிற்கு செயல்பட முடியாமலிருந்தது.	செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்னயிக்கப்படலும் வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.
(ஆ)	வெளிநாட்டு கடனின் கீழ் வாக்குப்பணபேரேட்டு இல 117-2.4-58 இனூடாக அரசாங்கம் ரூபா 14,504.00 மில்லியன் ஒதுக்கியிருந்தபோதிலும், செயற்திட்டமானது மேற்கூறப்பட்ட ஒதுக்கீட்டினை பயன்படுத்துவதற்கான ஓர் விபரமான பாதீட்டினை	நிலவும் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் மற்றும் நிர்மான மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் நிலவும் பாதகமான காலநிலை போன்றன காரணமாக ஒப்பந்ததாரர்களிற்கு அவர்களது இலக்கினை அடைந்துகொள்ளுமளவிற்கு	செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்னயிக்கப்படலும் வேண்டும். 2018 ஆம்

	தயாரித்து அனுமதித்திருக்கவில்லை. அதன் பெறுபேறாக ஒதுக்கீட்டின் 49.91 சதவீதமான ரூபா 7,239.04 மில்லியன் தொகையினை மாத்திரமே மீளாய்வாண்டில் பயன்படுத்தியிருந்ததுடன் பாதீடானது ஓர் வினைத்திறனான முகாமைத்துவ பொறிமுறையான பயன்படுத்தியிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.	செயல்பட முடியாமலிருந்தது.	ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.
(இ)	செயற்திட்டத்தின் விசேட டொலர் கணக்கு இல. 73633 (எஸ்எல்-2019) இன் பிரகாரம் கடன்வழங்கும் முகவர் மீளாய்வாண்டில் முற்பணமாக ரூபா 10,298.85 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 34.05 மில்லியன் தொகையை வழங்கியுள்ளதுடன் ரூபா 4,841.53 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 16.55 மில்லியன் தொகை அல்லது 47 சதவீதம் இந்த ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்படாமல் இருந்தது.	நிலவும் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் மற்றும் நிர்மான மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் நிலவும் பாதகமான காலநிலை போன்றன காரணமாக ஒப்பந்ததாரர்களிற்கு அவர்களது இலக்கினை அடைந்துகொள்ளுமளவிற்கு செயல்பட முடியாமலிருந்தது.	செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்னயிக்கப்படலும் வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.
(ஈ)	செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் அமுல்ப்படுத்தல் ஏற்பாடுகள் மற்றும் ஆதரவுத்திட்டம் என்பனவற்றின் பிரிவு 33 இன் பிரகாரம், கடன் உடன்படிக்கையிலிருந்து 12 மாதங்கள் காலப்பகுதிக்காக 100,000 கி.மீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால்	கடன் வழங்குனர் 100,000 கி.மீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பொருத்தமான செலவுகளை மீளப்பெற பின்னோக்கிய நிதியின் கீழ் ஐ.அ.டொலர் 75 மில்லியன் வசதியினை வழங்கியிருந்தது. ஆனால், இவ் வசதியின் கீழ் நிதிகளை மீளப்பெற,	செயற்திட்டமானது முறையான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதிடு என்பவற்றினை தயாரிக்க வேண்டியதுடன் அதனடிப்படையில் பொறுப்புக்கள் நிர்னயிக்கப்படலும் வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க

	ஏற்கனவே செய்யப்பட்ட பொருத்தமான செலவுகளை மீளப்பெற கடன் வழங்குனர் உடன்பட்டிருந்தார். கடன் வழங்குனர் பின்னோக்கிய நிதியாக ஐ.அ.டொலர் 75 மில்லியன் வசதியினை வழங்கியிருந்தும், கடன் வழங்குனரின் தேவைப்பாடுகளை கடைப்பிடிக்க இயலாமை காரணமாக ரூபா 3,949.43 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.89 மில்லியன் அல்லது 14.52 சதவீதம் மாத்திரமே மீளப்பெறப்பட்டிருந்தது.	அனைத்து உலக வங்கி வழிகாட்டல்களும் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். இருப்பினும், இவ் வழிகாட்டுதலிற்கு முழுமையாக இணங்கி 100,000 கி.மீ நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை.	தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் மீளாய்வில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

3.5 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு விடயங்கள்	**முகாமைத்துவத்தின் பதில்கள்**	**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்**
(அ)	அரசபெறுகை வழிகாட்டியின் பிரிவு 6.2.2 இன் பிரகாரம் தேசிய போட்டி விலைமனுவிற்கான ஆகக்குறைந்த விலைமனுக்காலம் 21 நாட்களாக இருக்க வேண்டும். இருப்பினும், 2023 திசெம்பர் 15 இல் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம், வாகனங்களை வாடகைக்கு	இப்பெறுகைக்கான விலைமனு ஆவணங்கள் சிக்கலானதல்ல, மேலும் ஒதுக்கப்பட்ட விலைமனுகாலமான 14 நாட்கள் வழங்குனர்களிற்கு அவர்களது விலைமனுக்களை தயாரித்து வழங்குவதற்கு போதுமானதாகும். மேலும் செயற்திட்டத்திற்கான இப்பெறுகையின் அவசர	பெறுகை வழிகாட்டியுடன் இணங்க வேண்டும். உரிய உத்தியோகத்தர்களுடன் தொடர்புபட்டு தாபன விதிக்கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் பிரிவு 29 இன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

	பெற்றுக்கொள்வதற்கான பெறுகைக்காக விலைமனுக்காலம் 14 நாட்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டிருந்தது.	நிலையினை கருத்தில் கொண்டும் அரச பெறுகை வழிகாட்டியின் பிரிவு 6.2.2 இன் பிரகாரமும், விலைமனுகாலப்பகுதி குறைக்கப்படலாம்.	
(ஆ)	**மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 80.99 கி.மீ கிராமிய வீதிகளின் ஒப்பந்தம்.**		
(i)	பெறுகை கைநூலின் பந்தி 7.9.2(எம்) இன் பிரகாரம் ஓர் விலைமனுவினது விலையின் நியாயத்தன்மை மதிப்பீட்டின் போது தீர்மானிக்கப்படல் வேண்டும். மேலும் விலைமனு விலையானது ஓரளவு குறைவாக காணப்பட்டால் விலைமனுதாரர் பெறுகை நிறுவனத்தின் திருப்தி, கோரப்பட்ட விகிதத்தின் படி வேலைகளை விலைமனுதாரர் எவ்வாறு செய்வார் என்பது பற்றியும் நிரூபிக்க வேண்டப்படல் வேண்டும். விலைமனுதாரரால் வழங்கப்பட்ட நியாயப்படுத்துதல்/ விளக்கம் ஏற்றுக் கொள்ள முடியாதென பெறுகை நிறுவனம் கருதினால் அவரது விலைமனு நிராகரிக்கப்படும். விலைமனு பொறியியலாளர் மதிப்பீட்டினை விட 19.91 சதவீதத்திலிருந்து 30.16 சதவீதம் குறைவாக காணப்பட்டிருந்தும், விலைமனுவானது செயற்திட்டத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவ்ஒப்பந்தங்களின் செயலாற்றல் ஆரம்ப ஒப்பந்த காலப்பகுதியிலிருந்து ஒன்பது மாதங்கள் (75சதவீதம்)	தெரிவு செய்யப்பட்ட குறைவாக மதிப்பிடப்பட்ட விலைமனுக்கள் அடையாளப்படுத்தப்பட்டிருந்த துடன் உரிய விலைமனுதாரர்களிடமிருந்து தெளிவுபடுத்தல்களும் கோரப்பட்டிருந்தன. இவ் இலக்கங்கள் டிஈசீ இனால் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரர் காலநீடிப்புக்கு வேண்டியிருந்ததுடன் நீடிக்கப்பட்ட காலப்பகுதியினுல் இலக்குகளை அடைந்து கொள்ள அவர்கள் உடன்பட்டனர்.	பெறுகை வழிகாட்டியுடன் இணங்க வேண்டும். உரிய உத்தியோகத்தர்களுடன் தொடர்புபட்டு தாபன விதிக்கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் பிரிவு 29 இன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

	கடந்திருந்தும் 26 சதவீதம் தொடக்கம் 56 சதவீதமாகவே இருந்தது, மேலும் அதனால் தாமதமின்றி பூர்த்திசெய்வதற்கான இடர் கணக்காய்வினால் உறுதிப்படுத்தமுடியாமலிருந்தது.		
(ii)	விலைமனு ஆவணங்களின் விலைமனு நடைமுறைகளின் (பகுதி-1) மதிப்பாய்வு மற்றும் தகுதி அளவுகோல் (பிரிவு – III) களின் பிரகாரம் செயல்படாத ஒப்பந்தங்களின் வரலாறு பெறுகையின் விலைமனுமதிப்பீட்டு செயன்முறையின் போது மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். இருப்பினும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் அமைச்சரவை பெறுகை குழு என்பன அவர்களது விலைமனு மதிப்பாய்வின் போது ஏனைய தொடர்புபட்ட செயற்திட்டங்களினால் வழங்கப்பட்ட உரிய ஆவணங்களை மதிப்பிட்டிருக்கவில்லை. எனவே முன்னைய ஒப்பந்தங்களை செய்துமுடிக்க தவறிய ஒப்பந்ததாரர்களிற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.	விலைமனு மதிப்பீடு நியமப்பெறுகை ஆவணங்களின் பிரகாரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதனடிப்படையில் டிஈசீ மற்றும் எம்பிசீ ஆனது முன்னர் செயலாற்றிய விலைமனுதாரர்களை கவனத்தில் கொண்டுள்ளது. இருப்பினும் அவர்களது நிதி இயளலவு மொத்த வழக்குத்தொகையும் கழிக்கப்பட்டதன் பின்னரும் கூட செயற்திட்ட தேவைப்பாட்டுடன் இணங்கியிருந்தது.	ஒப்பந்ததாரர்களின் செயற்படாமையின் வரலாறு பெறுகையின் விலைமனுமதிப்பீட்டு செயன்முறையின் போது மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் உரிய ஒப்பந்ததாரர்களை கறுப்பு பட்டியலில் இட நடவடிக்கை எடுக்கப்படலும் வேண்டும்.

3.6 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	**செயற்திட்டத்தின் கீழ் தற்செயல் அவசரகால பதிலளிப்புக் கூறை (CERC) செயற்படுத்துதல்.**		

	திறைசேரிச் செயலாளரின் 2022 மே 09 ஆம் திகதிய கடிதம் மற்றும் 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய உலக வங்கியின் நாட்டு பணிப்பாளரால் அனுப்பப்பட்ட தொடர் கடிதம் ஆகியவற்றின் பிரகாரம் செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறுக்காக ஐ.அ.டொலர் 325 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பதற்கும், உடனடித் தேவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் சீஈஆர்சீ நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட நோக்கெல்லையின் மாற்றங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2023/04/19 இலான மறுசீரமைப்பு பத்திரத்தினை உலகவங்கி அங்கீகரித்திருந்தது. இருப்பினும் ஐஅ டொலர் 15.06 மில்லியன் (சீஈஆர்ச இன் சேமிப்பு) இனை ஐசீடீபி இற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது அது மறுசீரமைப்பு செயன்முறையின் கீழ் உள்ளதுடன் மறுசீரமைப்பு செயன்முறை இறுதியாக்கப்பட்டதும் கடனிற்கான தற்போதைய மாற்றங்கள் உள்ளடங்களாக அமைச்சரவை அனுமதியினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆரம்ப கட்ட குறிக்கோள்களின் வேலைப்பரப்பினை மாற்றம் செய்ய கொள்கை தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் 2024 சனவரி 19 ஆம் திகதிய இல. டிஎம்எஸ்/7777/ஐசீடீபி/டி-1 கடிதத்தின் பிரகாரம், செயற்திட்ட உத்தியோகத்தர்களின் சம்பளமானது செயற்திட்டத்தின் கடன் பெறுவனவுகனை ஐ.அ.டொலர் 500 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர்	பிரதானமான உத்தியோகத்தர்கள் செயற்திட்ட கிரயத்தினை ஐ.அ.டொலர் 500 மில்லியனாககாட்டப்பட்டு விளம்பரப்படுத்தலினூடாக செயற்திட்டத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டதுடன் அவர்களது நியமனக் கடிதத்திலுள்ள சம்பள திட்டத்தின் அடிப்படையிலே செலுத்தப்பட்டது. எம்எஸ்டீ	சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் இனங்க வேண்டியதுடன் உரிய உத்தியோகத்தர்களுடன் தொடர்புபட்டு தாபன விதிக்கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII இன் பிரிவு 8 இன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

175 மில்லியனாக குறைத்ததன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் பந்தி 3.2.1 இன் படி கணிக்கப்படல் வேண்டும். கட்டுப்பாட்டு பத்திரம் 2023 மே 09 இல் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அதனடிப்படையில் செயற்திட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் அத்திகதியிலிருந்து மாற்றியமைக்கப்படல் வேண்டும். இருப்பினும், செயற்திட்ட பணிபாளர் மற்றும் முன்று பொறியியலாளர்களின் சம்பளங்கள் மறுசீரமைப்பு அனுமதிக்கப்பட முன்னரான ஆரம்பகட்ட விகிதங்களின் மீது செய்யப்பட்ட கணிப்பீடுகளின் அடிப்படையில் செலுத்தியிருந்தது. எனவே, உத்தியோகத்தர்களிற்கான சம்பள கொடுப்பனவு தொடர்பில் செயற்திட்டமானது ரூபா 277,376 மேலதிக கொடுப்பவினை செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது.	இடமிருந்து பதில் கிடைக்கப்பெற்றதன் பின்னர், செயற்திட்ட உத்தியோகத்தர்களின் அதிகரிப்பு மறுசீரமைக்கப்பட்ட கடன் நிதியின் அடிப்படையில் வழங்கப்பட்டதுடன் அதனடிப்படையில் கொடுப்பனவும் செய்யப்பட்டிருந்தது.	

(இ) **செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கான தனிப்பட்ட ஆலோசகர்களை தெரிவு செய்தல்**

ஆலோசனைச் சேவைகள் எனப்படுவது 2007 ஆகஸ்ட் மாதத்திலான ஆலோசகர்களை தெரிவு செய்து நியமிப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் 2014 ஜுலை மாதத்திலான உலக வங்கி கடன் வழங்குனர்களின் வழிகாட்டல்கள் என்பனவற்றின்	தனிப்பட்ட ஆலோசனை அட்டவணை 2.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருந்தக்கூடிய பெறுகை முறை மற்றும் மதிப்பாய்வு வகைகள் உண்மையான செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பக்கம் 49	அனுமதிக்கப்பட்ட ஆளனியினறிற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படக்கூடாது.

பிரகாரம் அறிவுசார் மற்றும் ஆலோசனை தன்மையுடய ஓர் ஆலோசகரால் வழங்கப்பட்டிருந்தும், செயற்திட்டமானது அனுமதிக்கப்பட்ட ஆளனியினரைத் தவிர்த்து தனிப்பட்ட ஆலோசனையின் கீழ் 03 முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்த்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டு மொத்தம் ரூபா 13.68 மில்லியன் தனிப்பட்ட ஆலோசனைக்காக ஏற்பட்டிருந்தது.	மற்றும் அட்டவணை 2.4 இலும் தள்ளுபடி வகுதிகள் பக்கம் 53 இலும் உள்ளதுடன் தனிப்பட்ட ஆலோசனைக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கக்கூடிய செயற்பாட்டுச் கிரயங்களினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.	

3.7 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
2021 ஒக்டோபர் 22 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளனியினரைத்தான்டி அமைச்சின் செயலாளரின் அனுமதியின் கீழ் செயற்திட்டமானது 10 சிற்றுழியர்களை (அலுவலக உதவியாளர், பராமரிப்பாளர், காவலாளி, கூலித் தொழிலாளி) பணிக்கமர்த்தியிருந்ததுடன் கடன் வழங்குனரின் நிதிகளில் அதிகரிக்கக்கூடிய செயன்முறை கிரயத்தின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 6.02 மில்லியன் செலுத்தப்பட்டுமிருந்தது. மேலும் அரசபெறுகை வழிகாட்டியின் பிரிவு 3.4.2 இற்கு முரனாக வழங்குனர் பதிவேட்டிற்கு	இப்பெறுகையானது கோவிட்-19 நோய்ப்பரவலின் போது தொடங்கப்பட்டது. ஆர்டிஏவின் பிரதேச செயற்பாடுகளிற்கு சேவை வழங்குகின்ற மத்திய மாகாணத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட மற்றும் நற்பேறுள்ள வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்களை கோருவதற்கு பெறுகை நிறுவனம் நடவடிக்கை எடுக்கின்றது.	அனுமதிக்கப்பட்ட ஆளனியினறிற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படக்கூடாது.

வெளியிலுள்ள தனிநபர்கள்/ நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் பெறப்பட்டிருந்தன.

3.8 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் ஒதுக்கப்பட்ட வளங்களினைப் பயன்படுத்தி செயற்திட்ட குறிக்கோள்களின் அடைவினை உறுதி செய்ய செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த காலப்பகுதியினையும் உள்ளடக்கி மாதாந்த, காலாண்டு, இரு ஆண்டுக்கு ஒருமுறை பொறுப்புக்களை நிறுவி நிதி மற்றும் பௌதீக இலக்குகளை முன்னிலைப்படுத்தும் ஓர் விரிவான செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	அனைத்து நிதி மற்றும் பௌதீக இலக்குகளையும் உள்ளடக்கிய ஓர் விரிவான செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு நோக்கத்திற்காக தயாராகவுமுள்ளது.	செயற்திட்டத்திற்கு ஓர் செயல் நடவடிக்கைத்திட்டத்தினை தயாரித்து அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.